பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 25 சனிக்கிழமை (09-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 44

# ராணுவ நடவடிக்கைகள் குறித்து தெற்கு சிங்களவர்களுக்கு அதிருப்தி

## உரிய பலன் கிடைக்கவில்லையாம்

கொழும்பு, ஜனவரி 9

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஸ்ரீலங்காப் படைகள் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து தென்பகுதி சிங்களவர்களில் கணிசமானோர் அதிருப்தி அடைந்துள்ளனர். இராணுவ நடவடிக்கைகளினால் உரிய பலன் கிடைக்கவில்லை என அவர்கள் கருதுகிறார்கள்.

ஜேர்மன் வானொலிக்கு அதன் கொழும்புச் செய்தியாளர் ஊலியன் ராஜகருணநாயக்கா அனுப்பி வைத்த செய்திக் கடிதத்திலேயே இத் தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

10 வருடங்களாகப் போர் நீண்டுகொண்டே போகிறது. ஆனால் இராணுவத்தினால் புலிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இது குறித்து தென்பகுதி சிங்களவர்கள் அதிருப்தி அடைந்திருக்கின்றனர்.

இராணுவ நடவடிக்கைகள் உரிய பயன் தரவில்லை

(6ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சோதனையுடன் கிளாலிப் பயணிகள் சேவை

### படைத்தரப்பு யோசனை இது!

கொழும்பு, ஜன. 9

பாதுகாப்புப் படையினரால் தடை செய்யப்பட்டுள்ள கிளாலி ஏரி ஊடாக — படையினரின் சோதனைக்குப் பின்னர் — பகலில் பொதுமக்கள் பயணம் செய்வதற்கு அனுமதிப்பது குறித்து பரிசீலனை செய்யலாம்.

— இவ்வாறு கூட்டுப்படைகள் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமண தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் கிளாலிப் பாதை குறித்து கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (உ-எ)

## வருடத்தில் 187 நாட்கள் லீவு

கொழும்பு, ஜன. 9

இலங்கையில் அரச ஊழியர்கள் இந்த வருடத்தில், ஆண்டின் அரைவாசிக்குக் குறைந்த நாட்களே வேலை செய்யவிருக்கின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அவர்களுக்கு வழங்கப்பட்ட லீவுகள், அரசு அறிவித்துள்ள பொது விடுமுறை தினங்கள் மற்றும் வாராந்த ஓய்வு நாட்கள் ஆகியவற்றைக் கழித்துப் பார்த்தால் அரசு ஊழியர் ஒருவர் 178 நாட்களே வேலை செய்வர் என்றும் — அரச ஊழியர்களுக்கு 187 நாட்கள் விடுமுறை நாட்களாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

### போக்குவரத்து நெருக்கடி

## யாழ். மக்களின் கஷ்டம்; கவலைப்படுகிறார் ரணில்!

கொழும்பு, ஜன. 9

யாழ். குடாநாட்டு மக்கள் குடாநாட்டிற்கு வெளியே செல்வதில் அனுபவிக்கும் போக்குவரத்துச் சிக்கல் குறித்து அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கவலை தெரிவித்தார்.

கடந்த வியாழனன்று கொழும்பில் நடைபெற்ற வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளராகப் பங்குபற்றி, செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

தரைமார்க்கமான போக்குவரத்தை புலிகள் அமைப்புத் தடை செய்துள்ளதால் யாழ்ப்பாண மக்கள் கஷ்டங்களை எதிர்நோக்குவதாக அவர் சொன்னார். [உ-6]

## கிளாலிப் படுகொலைகள்: 55 பேர் உயிரிழந்தனர்?

கொழும்பு, ஜன. 9

கடந்த சனியன்று கிளாலிக் கடல் பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த 55 பொதுமக்களின் சடலங்கள் இதுவரை கரை ஒதுங்கியிருக்கின்றன.

— ஜேர்மன் வானொலி இவ்வாறு அறிவித்தது.

மேலும் சுமார் 25 பேர் உயிரிழந்தோ அல்லது காணாமற் போயோ இருக்கலாம் என்று கொழும்பில் தமிழ் வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் அறிவிக்கப்பட்டது. கிளாலியூடான போக்குவரத்து நிறுத்தப்பட்டிருப்பதாக கொழும்புக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிப்பதாகவும் —

இதனால் சுமார் 6 ஆயிரம் பயணிகள் இடைநடுவில் நிர்க்கதி நிலையில் விடப்பட்டிருப்பதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டது. (உ)

## மாவுடன் 'குமண' கப்பல் இன்று இங்கு வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஜன 9

திருகோணமலையில் இருந்து ஆயிரத்து 200 மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு 'குமண' கப்பல் இன்று காலை பருத்தித்துறையை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'பிரிமா' ஆலையில் இருந்து

[6 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



ஆடு நனையுது என்டு ஓநாய் கவலைப்பட்ட கதையாய் எல்லோ இடக்குது உது ...!

## மீட்பு நிதி

யாழ்ப்பாணம், ஜன. 9

இதுவரை மீட்பு நிதி செலுத்தத் தவறிய வசதி படைத்தோர் — சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தோர் — தமது மீட்பு நிதிக்கான கட்டணை இன்று பிற்பகல் 3 மணி தொடக்கம் 3 30 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் செலுத்தலாம் என அறிவிக்கப்படுகிறது. (ஒ)

## கண்காட்சியில் தீ! நூல்கள் நாசம்

சென்னை, ஜன. 9

சென்னையில் நடைபெற்று வந்த பெரும் புத்தகக் கண்காட்சி ஒன்றில் நேற்று முன்தினம் இரவு தீப்பிடித்ததில் பல கோடி ரூபா பெறுமதியுடைய புத்தகங்கள் எரிந்து நாசமாகின.

கண்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த 162 புத்தகக்

(6 ஆம் பக்கம் பார்க் )

### வெகுசன போராட்ட ஏற்பாடுகள்:

## நகரில் திங்கள் எழுச்சிப் பேரணி மக்களை அணி திரள அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 9

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ். நகரில் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நடக்கவிருக்கும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கான முன் ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த வெகுசனப் போராட்டத்துக்காக பல்வேறு அமைப்புகளும் களத்தில் குதித்துள்ளன.

ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட பொருளாதாரத் தடைகளைக் கண்டித்தும் — ஆட்சேபித்தும் நடக்கவிருக்கும் மேற்படி போராட்டத்தில் சகலரும் அணி திரண்டு வந்து கலந்துகொண்டு தமிழ் மக்களின் ஏகோபித்த எதிர்ப்பை வெளிப்படுத்துமாறு வெகுசன அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளன.

இதற்காக பல்வேறு அமைப்புகளும் கலந்துரையாடல்களை நடத்தி, மக்களுக்கு விளக்கம் அளித்து வருகின்றன.

வெகுசன போராட்டத்துக்கு குடாநாட்டு மக்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா அரசின் கொடுமை: ஐ. நா. சபைக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜன. 9

தமிழீழ மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு புரிந்து வரும் அட்டூழியங்கள், அநியாயங்கள், நெடுக்கடிகள் மற்றும் பொருளாதாரத் தடை போன்ற கொடுமைகளை விளக்கி, ஐக்கிய நாடுகள் சபைக்கு மகஜர் ஒன்று அனுப்பப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா அரசின் கொடுமைகளை எடுத்துக்காட்டும் வகையில் எதிர்வரும் திங்கட்கிழமை, வெகுசனப் போராட்டம் — ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படவிருக்கிறது.

அன்று ஆர்ப்பாட்டப் பேரணியின் பின்னர் அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட இருக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# போக்குவரத்து அவலத்தை நீக்க முடிந்ததைச் செய்வேன்

## யாழ். வந்த ஆயர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் தமது உயிரைப் பணயம் வைத்துப் போக்குவரத்து செய்யும் அவலத்தை நான் கண்டேன். கொழும்பு திரும்பியதும் அந்த நிலையை நீக்குவதற்கு எனது கவனத்தைச் செலுத்துவேன்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். வந்துள்ள ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ.

தமக்கு அளிக்கப்பட்ட பொதுவரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஆயர் தமது பதிலுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பு திரும்பியதும் மக்கள் போக்குவரத்துக்கு உயிரை பணயம் வைத்து பிரயாணம் செய்யும் இக்கட்டான நிலையை நீக்க முழுக் கவனத்தையும் செலுத்துவேன். கிளாலியை அங்கீகரிக்கப்பட்ட பாதையாக்குவதற்கோ அல்லது வேறு ஒரு பாதையால் மக்கள் போக்குவரத்தை நடத்தவோ ஏற்ற நிலையை உருவாக்க முயற்சி மேற்கொள்வேன்.

விடுதலைப் புலிகளும், அரசும் மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை ஆராய வேண்டியது அவசியமாகும்.

### எச்சரித்தது தெரியாது

கிளிநொச்சி வரை வருவதற்கு அரசு எனக்கு அனுமதி வழங்கியிருந்தது. அதற்கு அப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஆயருக்கு நகரில் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ். வந்து சேர்ந்துள்ள அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோவுக்கு நேற்று வரவேற்பு அளிக்கப்பட்டது. சென்ஜோன்ஸ் கல்லூரி ஜுபிலி மண்டபத்தில் நேற்று மாலை

[ 6ஆம் பக்கம் பார்க்க]

# தமிழர் தம் முடிவுகளிலிருந்து இனி திரும்பவே மாட்டார்கள்

## நேற்றைய பொது வரவேற்புக் கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், ஜன. 9

"நாற்பது ஆண்டு கால நீண்ட அடிமை வாழ்விலிருந்து வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தெளிவான பாடங்களையும், அனுபவங்களையும் பெற்றுவிட்டார்கள்; நாம் சில முடிவுகளை அண்டிவிட்டோம். அவற்றிலிருந்து திரும்ப மாட்டோம். எமது எதிர்காலத்தையும் விருப்பங்களையும் நிர்ணயிக்கும் சக்தியை நாமே வைத்திருக்க விரும்புகிறோம்."

இவ்வாறு தெரிவித்தார் றோமன் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த அருட்கலாநிதி எஸ். ஜே. இம்மானுவல்.

யாழ் வந்துள்ள அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோவுக்கு அளிக்கப்பட்ட பொது வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

கடந்த இரண்டரை ஆண்டு கால யுத்தத்தில் யாழ் குடா வில் சிறையில் இருப்பது போல

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ மக்களின் ஒன்றிணைந்த மாபெரும் வெகுஜனப் போராட்டமும் ஊர்வலமும்

காலம் :

11 - 01 - 1993 திங்கட்கிழமை காலை 10 மணி

இடம் :

நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றல்

பின்வரும் 5 கோரிக்கைகளை வலியுறுத்தி யாழ். மாவட்ட வெகுஜன இயக்கத்தினால் முன்னெடுக்கப்படும் வெகுஜனப் போராட்டத்திலும் ஊர்வலத்திலும் அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினதும், தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களினதும், சிக்கன சேமிப்புக் கூட்டுறவுச் சங்கங்களினதும், இதர சங்கங்களின் அங்கத்தவர்களும், பணியாளர்களும், பாவனையாளர்களும் "இது எமது போராட்டம்" என்ற உணர்வுடன் முழுப்பங்கினை அளித்து போராட்டம் வெற்றி பெற உதவுவதற்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலுக்கு அலையெனத் திரண்டு வருமாறு வேண்டுகிறோம்.

## ஐந்து அம்சக் கோரிக்கைகள் :

★ 32 மாத காலம் நடைபெறும் அர்த்தமற்ற போரை முடிவுக்குக் கொண்டு வருதல்.

★ பூநகரி இராணுவத்தை வாபஸ் பெற்று பூநகரிப் பாதையை மக்கள் பாவனைக்குத் திறத்தல்.

★ யாழ். மாவட்டத்துக்கு விதிக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள்களின் தடையை நீக்கி, பொருள்கள் தடையின்றிக் கிடைக்க வழி செய்தல்.

★ விடுதலைப் புலிகளுடன் உடனடிப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தல்.

★ யாழ். மாவட்டத்தில் நத்தார் தினத்திலும் தொடர்ந்த நாட்களிலும் விமானப்படையாலும், கடற்படையாலும் ஈவிரக்கமற்ற முறையில் நடத்தப்பட்ட படுகொலைகளை வெளிக்கொணர்தல்.

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை

(சி/4122)

# நாளை நடப்பவை

யாழ்ப்பாணம், ஜன. 9

தமிழீழக் கல்வி மேம்பாட்டுச் சபையின் மாதாந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு தமிழீழக் கல்விக் கழகப் பணிமனையில் நடைபெறும்.

(த)

o o o

யாழ்ப்பாணம், ஜன. 9

மருதனார்மடம் கல்விக் கோட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நாளை இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் (உ)

o o o

யாழ்ப்பாணம், ஜன.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் நடத்தும் "பிட்மன்" சுருக்கெழுத்து வார விழாவும் ஐந்தாவது சான்றிதழ் வழங்கும் வைபவமும் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறும்.

(க)

o o o

யாழ்ப்பாணம், ஜன. 9

நீராவியடி மகளிர் பணியக நிதி உதவிக்காக செல்வி குஞ்சலா நாகராஜ ஐயரின் இசைமாலை, இலங்கை வேந்தன் குழுவினரின் "கதகளி பரத நாட்டியம்", புலவர் முத்து இராசரத்தினத்தின் இலங்கை வேந்தன் இசை - நடன - நாடகம் ஆகியன யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில் நாளை 10 ஆம் திகதி பி.ப. 3. 30 மணிக்கு நடைபெறும்.

(க)

o o o

யாழ்ப்பாணம், ஜன 9

யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும்— புதிய மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்கான — உடற்தகுதிகாண் பரீட்சை நாளை காலை 7 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும்.

(உ)

o o o

யாழ்ப்பாணம், ஜன 9

உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகள் சமரச சன்மார்க்க நிலையத்தில் நாளை காலை 9 மணிக்கு நடைபெறும் அத்வைத வேதாந்த நிகழ்ச்சியில் வைத்திய கலாநிதி திரு. வ. சின்னப்பு சொற்பொழிவாற்றுவார்.

(உ)

o o o

யாழ்ப்பாணம், ஜன. 9

குரும்பசிட்டி சன்மார்க்க நுண்கலை மன்றம் நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் நடைபெறும்.

கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமை வகிக்கும் இக்கருத்தரங்கில் "கலைக் கோட்பாடுகள்" என்னும் பொருள்பற்றி யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் கலாநிதி சோ. கிருஸ்ணராஜா உரை நிகழ்த்துவார்.

[க]

## இன்று

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் ஏ. ஈ. தம்பரின் நினைவுச் சொற்பொழிவு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

"மத்திய கல்லூரி தந்த மூவர்" என்னும் பொருளில் மூதறிஞர் க. சி. குலரத்தினம் உரையாற்றுவார்.

[க]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 9

கந்தர்மடம் ஸ்ரீசிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில், இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருவாசக முற்றோதல் பூர்த்தி விழா நடைபெறவுள்ளது. சிறப்புச் சொற்பொழிவுகள் திருமுறைப் பண்ணிசை ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (உ)

★ ★ ★

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் தென்மராட்சிக் கோட்டத்தினர் நடத்தும் கலை நிகழ்ச்சிகள் இன்று இரவு 7 30 மணிக்கு கைதடி நவீலட் பாடசாலை அரங்கில் இடம்பெறும் இந்நிகழ்வில் "களத்தில் காத்தான்" "புதிதாய் எழுவோம்" ஆகிய இரு நாடகங்களும் மேடையேறவுள்ளன.

(உ)

# சிறுபோகச் செய்கைக்கு புதிய விவசாயத் திட்டம்

எதிர்வரும் சிறுபோக காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுபோக விவசாய செய்கைக்கென புதிய விவசாயத் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட உள்ளதாக தெரியவருகின்றது.

விவசாய சேவைத் திணைக்களமும் அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவும் இணைந்து இப்புதிய திட்டத்தை அமுல்படுத்த உள்ளன.

இச்சிறு போகத்தின் போது

(5 ஆம் பக்கம் பார்க்க)

# மாபெரும் வெகுஜனப் போராட்டமும் ஊர்வலமும்

காலம் : 11—01—93 திங்கட்கிழமை

நேரம் : 10.00 மணி

ஆரம்பம் : நல்லூர் கந்தசுவாமி கோவில்

## திரண்டு வாரீர்! திரண்டு வாரீர்!!

ஒருமித்து குரல் கொடுப்போம்

## ஐந்து அம்சக் கோரிக்கை

1. 32 மாதகால அர்த்தமற்ற போரை முடிவிற்கு கொண்டு வருதல்.
2. பூநகரி இராணுவத்தை வாபஸ் பெற்று, அதனூடான பாதையை மக்களின் பாவனைக்காகத் திறக்கப்படல்.
3. அத்தியாவசியப் பொருள்களின் தடையை நீக்கி, சகல பொதுமக்களுக்கும் கட்டுப்பாடு, தட்டுப்பாடின்றி கிடைக்கக்கூடியதாக விநியோகம் செய்தல்.
4. விடுதலைப் புலிகளுடன் உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பித்தல்.
5. நத்தார் தினத்தன்று நடைபெற்ற கண்மூடித்தனமான விமானத் தாக்குதல், கிளாலி படகுப் போக்குவரத்துச் சேவை படுகொலை, சித்தன்கேணி படுகொலை ஆகியவற்றை தெரியப்படுத்துதல்.

ஊர்வலம் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பமாகி கோவில் வீதி வழியாக செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையை அடைந்து, பின்னர் ஆஸ்பத்திரி வீதியூடாக கச்சேரியை அடைந்து, இவ் இரண்டு இடங்களிலும் மகஜர் கையளிக்கப்படும்.

அனைத்து மக்களையும் ஒன்று திரண்டு இவ் ஊர்வலத்தில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அழைக்கிறோம்.

(சி/4121) — யாழ். வர்த்தக சங்கம்

# கண்ணீர் அஞ்சலி

## T. யோகராஜா

யாழ். இந்துக் கல்லூரியின் கணக்கியல் ஆசிரியர் திரு. T, யோகராஜா அவர்கள் இறைத்துவமடைந்துவிட்டார். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துகிறோம்.

யாழ். இந்துக் கல்லூரி,
வர்த்தகத்துறை
(உயர்தரம் 92)

(23987)

# யாழ். இந்து சமூகத்தின் கண்ணீர் அஞ்சலி

## தேசிங்குராஜா யோகராஜா B. Com

(ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

தோற்றம்: 25-12-1961 மறைவு: 08 01 1993

இந்துக் கல்லூரியின் வர்த்தகக் கல்வி
ஆசானாய் அமர்ந்து
ஆண்டு சில ஆனாலும்
பணியால - பண்பால்
அனைவர் உள்ளத்தையும்
கவர்ந்த யோகராஜாவின்
இழப்பு எமக்குப் பெரிதே.
அவர் ஆத்மா சாந்தி பெற
இறைஞ்சும் நேரத்தில்
அவரது மனைவிக்கும்
ஏனையோர்க்கும் எமது
ஆழ்ந்த அனுதாபத்தையும்
தெரிவிக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.
09-01-1993

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பழைய மாணவர்கள்.
(யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

குறிப்பு: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் அனைவரும் இன்று (09-01-93 காலை 8-30 மணிக்கு கல்லூரிக்குச் சமுகம் தரவும். மாணவ அமைப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் அவர்கள் சார்ந்த அமைப்புக்களின் கோல உடையில் சமுகம் தரல் வேண்டும்.

—அதிபர்

(சி 123

# C.C.A

## கலை, வர்த்தக கல்லூரி

வெலிங்டன் சந்திக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.

## A/L 93

பகல் நேர வகுப்புகள்

DAY CLASSES

பிரிவு III

பொருளியல்
திரு உதயன்
கணக்கியல்
திரு ஸ்ரீ
வர்த்தகம்
திரு. குகன்
அளவையியல்
திரு சயந்தன்
இந்து நாகரிகம்
திரு. ஜோதீஸ்வரன்
தமிழ்
திரு. தங்கராசா
புவியியல்
திரு. வேலாயுதபிள்ளை

ஆரம்பம்:
12 01 — 1993

★ வாரத்தில் செவ், வியா, சனி, ஞாயிறு நான்கு நாட்களும் வகுப்புகள் நடைபெறும்.

★ பகல் நேர வகுப்பின் இறுதிப் பிரிவு

# சனசமூக நிலையங்களின் உப சமாசங்கள், சமாசங்கள், சம்மேளனங்கள் ஆகியவற்றின் நிர்வாகிகள் தெரிவு - 1993

கீழ்க்காணும் அடிப்படையில் இத்தேர்தல்கள் இடம்பெறும்.

| | திகதியும், நேரமும் | தேர்தல்கள் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01. | 30—01—93 காலை 10-00 மணி | உப அலுவலகங்களின் சமாசங்கள்; நகர சபைகளின் சமாசங்கள்; மாநகர சபைச் சமாசம். | சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் காரியாலயங்கள் |
| 02 | 13—02—93 காலை 10-00 மணி | வடமராட்சி தெற்கு மேற்கு; வலிகாமம் மேற்கு; வலிகாமம் தென்மேற்கு; வலிகாமம் தெற்கு; சாவகச்சேரி ஆகிய பிரதேச சபைகளின் சமாசங்கள். | சம்பந்தப்பட்ட பிரதேச சபைகளின் அலுவலகங்கள் |
| 03. | 14—02—93 காலை 10-00 மணி | பருத்தித்துறை; வலிகாமம் கிழக்கு; வலிகாமம் வடக்கு; நல்லூர் ஆகிய பிரதேச சபைகளின் சமாசங்கள். | சம்பந்தப்பட்ட பிரதேச சபைகளின் பணிமனைகள் |
| 04. | 20—02—93 காலை 0-00 மணி | சம்மேளனம். | யாழ். இந்துக் கல்லூரி |

இத்தேர்வுகளில் 1992 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பொதுச் சபைகளைக் கூட்டிப் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்த சனசமூக நிலையங்களே மேற்படி தேர்தல்களில் பங்கு பற்ற அனுமதிக்கப்படும் என்பதனைச் சனசமூக நிலையங்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

சுந்தரம் டிவகலாலா,
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம், 1993-01-07.

(சி-4110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹற்றன் நஷனல் வங்கியின்

அனுசரணையுடன் நடைபெறும்
மாபெரும்

## கூடைப்பந்தாட்டப் போட்டி

யாழ் மாவட்ட முன்னணிச் சமூகங்கள், பாடசாலைகள் பங்குபற்றும் மாபெரும் கூடைப்பந்தாட்டப் போட்டி.

இடம்: யாழ் பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அரங்கு.

காலம்: 8ஆம் திகதி முதல் 1 ஆம், 19ஆம், 22ஆம் திகதிகள் தவிர்ந்த ஏனைய நாட்களில். தினமும் மாலை 3-30 மணிக்கு ஆரம்பமாகும்.

இறுதிப் போட்டி: 23-0 -1993

பங்குபற்றும் குழுக்கள்:

1. யாழ். பல்கலைக்கழகம்
2. புனித சம்பத்திரிசியார் கல்லூரி
3. யாழ். மத்திய கல்லூரி
4. யாழ்ப்பாணக் கல்லூரி
5. சென்ஜோன்ஸ் கல்லூரி
6. சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம்
7. ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம்
8. ஷப்றா விளையாட்டுக் கழகம்
9. பற்றீஷியன்ஸ் விளையாட்டுக் கழகம்
10. பல்கலைக்கழக உத்தியோகஸ்தர்கள்

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

### ஹற்றன் நஷனல் வங்கி

HATTON NATIONAL BANK LIMITED HNB

உங்கள் முன்னேற்றத்தின்
பங்காளிகள்.

(சி 4116)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் கணக்கியல் ஆசிரியராக
கடமை புரிந்த

### தே. யோகராஜா

அவர்களது

இழப்பு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி உள்ளது.
அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

### புதிய உயர் கல்லூரி

இயக்குனர்,
விரிவுரையாளர்கள்,
மாணவர்கள்,
சிற்றூழியர்கள்.

இன்று அன்னாரது ஈமக்கிரியைகள் நடைபெற உள்ளதால், எமது சகல வகுப்புகளும் நடைபெறமாட்டா என்பதையும் அறியத் தருகின்றோம்.

(சி/41.7

## கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
முன்னாள் அதிபர்
திருமதி

### இரதிலட்சுமி ஆனந்தகுமாரசாமி

இருபத்தைந் தாண்டின் மேலாய்
இனிய அதிபராய் கல்விப்
பெருமை சேர்த்து ஆசிரியப்
பெரியோர் பலரை உருவாக்கிக்
கரும வீராங்கனை யாகிக்
கல்விப் பயிரை வளர்த்தனையே
திருவே யனையாய்! பிரிந்திட்ட
செய்தி எம்மை வாட்டுதம்மா
அரிய ஈசனார் பாதம்
ஆத்ம சாந்தி பெற்றிடுக!

கோப்பாய்,
09-01-.993.

அதிபர்,
விரிவுரையாளர்கள்.

(23983)

நல்லூர் ஓய்வூதியர் சங்கம்
(வ. பா. ஓ சம்மேளன இணைப்பு)

## 11ஆவது ஆண்டு பொதுக் கூட்டம்

இடம்: திருநெல்வேலி சை. த. க. பாடசாலை
காலம்: 24-01-1993 ஞாயிறு காலை 10 மணி
பிரதமவிருந்தினர்: திரு கா. மாணிக்கவாசகர்
(யாழ் அரச அதிபர்)

புதிய அங்கத்துவம், பழைய நிலுவைகள், பிரேரணைகள் வரவேற்கப்படும்.

நன்றி.

R. T. சுப்பிரமணியம்,
தலைவர்.

P. S. திருச்செல்வம்,
செயலாளர்

09-01-1993

(23984)


## SUBRA

### (சுப்றா கல்வி நிலையம்)

சித்தன்கேணி

O/L பகல்நேர வகுப்புகள்
ஆரம்பமாகின்றன
(DAY CLASSES)

**ஆரம்பம்: 10-01-1993**
காலை 10-00 மணி

முன்னணி ஆசிரியர் குழுவின் ஒருங்கிணைந்த போதனையில் வாரத்தில் நான்கு நாட்கள் வகுப்புகள்.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு செல்வவடிவேல் |
| | — | திரு. சுதாகரன் |
| கணிதம் | — | திரு. சதீஸ் |
| சமூகக்கல்வியும் வரலாறும் | — | திரு. செல்வரட்ணம் |
| | | திரு. புவனேந்திரன் |
| தமிழ் | — | திரு. சின்னத்தம்பி |
| ஆங்கிலம் | | திரு. தெய்வதவபாலன் |
| | — | செல்வி திருமகள் |
| வர்த்தகம் | — | திரு. விஜேந்திரன் |

### ஆண்டு 5

புலமைப் பரிசில் பரீட்சைக்கான வகுப்புகள்
அனுபவமும், திறமையுமிக்க கடந்த காலங்களில்
மாணவர்களின் சிறப்பான பெறுபேறுகளை
பெற்றுத்தரும் ஆசிரியர்கள்

திரு. சின்னத்தம்பி திரு. புவனேந்திரன்
ஆகியோரினால் சிறப்பாக பயிற்றுவிக்கப்படுகின்றது.

**ஆரம்பம்: 10-01-1993**
காலை 10-00 மணி (ஞாயிறு)

(23973)



## அங்லோ ஏசியன் பேர்ட்டிலைசெர்ஸ்

கம்பனி வழங்கும்.. .

### "சுமிசிடின் சுப்பர்"

### SUMICIDIN SUPER

வெங்காயம், கத்தரி, கோவா,
உருளைக்கிழங்கு, போஞ்சி
போன்ற பயிர்களைத் தாக்கும்
தாள் கோதிப்புழு, நண்டுதுளைப்பான்,
கோவா மயிர்கொட்டிப் புழு, டயமன் முதுகுவண்டு
மற்றும்
பூச்சிகளையும் திறம்பட கட்டுப்படுத்துகின்றது.
பீடை நாசினி விற்பனையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்

(சி-2865)



வருடம் வருடம் சிறந்த பெறுபேறுகளைப்
பெற்றுத்தரும் அனுபவமிக்க
வழமையான ஆசிரியர் குழு

## O/L DEC. 1993

- ✶ கணிதம்
- ✶ தமிழ்
- ✶ ஆங்கிலம்
- ✶ வர்த்தகம்
- ✶ மனைப்பொருளியல்
- ✶ சங்கீதம்
- ✶ விஞ்ஞானம்
- ✶ சமூகக்கல்வி
- ✶ சமயம்
- ✶ விவசாயம்
- ✶ சித்திரம்
- ✶ நடனம்

ஆகிய பாடங்களுக்கான வகுப்புகளுடன்

**4, 5, 6, 7, 8, 9, 10 ஆம்**
ஆண்டுகளுக்கான வகுப்புகளும்

புதிய பிரிவுகள்:

ஆரம்பம்: 09-01-1993

## BOND Institutes

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஒவ்வொரு மாணவரினதும் Progress Report குறித்த மாதத்தில் நான்காம் திங்கட்கிழமைகளில் தபாலில் பெற்றோரின் கவனத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

(சி-4100)


## மகாபொல கொடுப்பனவு-
## 1ஆம் தவணைப் பணம்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள்
பின்வருமாறு செய்யப்பட்டுள்ளன.

**இரண்டாம் வருடம்**

| பிரிவுகள் | திகதி | நேரம் |
|---|---|---|
| மருத்துவ பீடம்<br>கலைப் பிரிவு<br>வர்த்தகப் பிரிவு<br>வியாபார நிர்வாகப் பிரிவு<br>பௌதிக விஞ்ஞானப் பிரிவு<br>உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 11 — 01 — 93<br>15 — 01 — 93<br>20 — 01 — 93 | 1-30 — 3-00 பி. ப.<br>1-30 — 3-00 பி. ப.<br>1-30 — 3-00 பி. ப. |

**மூன்றாம் வருடம்**

| பிரிவுகள் | திகதி | நேரம் |
|---|---|---|
| மருத்துவ பீடம்<br>கலைப் பிரிவு<br>வர்த்தகப் பிரிவு<br>வியாபார நிர்வாகப் பிரிவு<br>பௌதிக விஞ்ஞானப் பிரிவு<br>உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 12 — 01 — 93<br>18 — 0 — 93<br>21 — 01 — 93 | 1-30 — 3-00 பி. ப.<br>1- 0 — 3-0) பி. ப.<br>1-30 — 3-00 பி. ப. |

**நான்காம் வருடம்**

| பிரிவுகள் | திகதி | நேரம் |
|---|---|---|
| மருத்துவ பீடம் (4ம், 5ம் வருடங்கள்)<br>கலைப் பிரிவு<br>வர்த்தகப் பிரிவு<br>வியாபார நிர்வாகப் பிரிவு<br>உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 13 — 01 — 93<br>19 01 — 93<br>22 — 01 — 93 | 1-30 — 3-00 பி. ப.<br>1-30 — .-00 பி. ப.<br>1-30 — 3-0ɹ பி ப |

கொடுப்பனவின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை.
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை.

- பதிவாளர்.

(சி-4119)


ஆரம்பமாகிவிட்டது

## A/L PHYSICS

### சங்கர்

உடன் நாடுங்கள்:

### நியூ மற்ஸ் அக்கடமி

வானவில் முன்பாக,
யாழ். ஆரியகுளம் சந்தி,

- ★ எளிமையான விரிவுரை
- ★ தரமான கணக்குகள்
- ★ சிறந்த பரீட்சை அணுகுமுறை
- ★ கடந்த கால வினா விடை

நிறைந்த

### பௌதிகவியல்

பிரிவு 1
சனி, ஞாயிறு 7a m.
பிரிவு 2
சனி, ஞாயிறு 8 .m.
பிரிவு 3
செவ், வியா. 4 p m.
பிரிவு 4
செவ், வியா. 5p m.

O ஒரு மாணவருக்கு ஒரு பிரிவிற்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும்.

(சி-4167)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### மலிவு விற்பனை

அழகிய கலண்டர்கள் பல தினிசுகளில் விற்பனைக்கு உண்டு. வர்ணக் கலர்களில் பதிப்பித்தும், படங்கள் தனியாகவும் சிலிப் தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தக சாலை, 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
(23910)

### மணமகன் தேவை

காங்கேசன் துறையைச் சேர்ந்த தற்போது நீர்வேலி வடக்கில் வசித்துவரும் A/L பயின்ற பெண், வயது 29, செவ்வாய் 7, உத்தரம் 1ஆம் பாதம் உள்ளவருக்கு மணமகன் தேவை. உடன் தொடர்புகொள்ளவும்: இல 873, மேபா உதயன்.
(5717)

### ஒலிவ் ஸ்நானப் பவுடர்

இயற்கை வாழ்வே சிறந்த வாழ்வு. இயற்கை வாழ்வுக்கு எண்ணெய் முழுக்கு அவசியம். சிகைக்காய், எலுமிச்சம் கோது, பயறு, வெந்தயம் மற்றும் மூலிகை வகை கொண்டு தயாரான ஒலிவ் ஸ்நானப் பவுடர் பாவித்துச் சுகம் காணுங்கள். அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற்.
(சி 4102)

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம் சந்திப்பு: சனி காலை
(23968)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 14 — 10 — 1943

மறைவு: 09 — 12 — 1992

### துரைசிங்கம் செல்வராணி

எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த எம் அன்புத் தாயே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு என்றும் அகலாது இருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
கணவன், பிள்ளைகள், சகோதரர்கள்.

''பழமுதிர்ச்சோலை'',
கற்பொக்கணை, உடுவில்.
(சி 4115)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 14 — 02 — 1923

உதிர்வு: 08 — 12 — 1992

### அமரர் கந்தையா கனகசபை

(லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

எங்கள் அருமை அப்பாவே! திருக்கார்த்திகை தினமதிலே எங்களை ஏக விட்டு எங்கு சென்றீர்கள். புன்னகை குடியிருக்க, புகழ்வண்ணம் சேர்ந்திருக்க அன்புள்ளம் நிறைந்திருக்க கண்ணியம் நிறைந்த உங்கள் முகம் காணாது ஏங்கித் தவிக்கின்றோம் - அப்பா!

ஆறாது ஆறாது அழுதாலும் தீராது. நீராகிப் போன நிலை நினைவிலும் மாறாது. மாறாத அன்பு கொண்டு மகிழ்வுடன் வளர்த்தீர்களே! தேறாது நிற்கின்றோம்; தேம்பியே நாம் இங்கு நிற்கின்றோம். உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம். இன்று 09 - 01 - 1993 இல் நடைபெறும் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''கோகுல வாசம்''
லிங்கம் ஸ்ரோர்ஸ்,
இணுவில்.
(23949)

## யாழ். மாவட்ட தச்சுத் தொழிலாளர் சங்கம்

ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத் தடையை எதிர்த்தும், நான்கு அம்சக் கோரிக்கையை முன்வைத்தும், தமிழீழ வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டப் பேரணி எதிர்வரும் 11 - 01 - 1993 திங்கள் காலை 10 மணிக்கு நல்லூரில் இருந்து யாழ். செயலகம் வரை நடைபெறவுள்ளது. இப்பேரணியில் அனைத்து தொழிலாளர்களும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

-நிர்வாகம்.

(5720)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 22 — 06 — 1925

மறைவு: 10 — 12 — 1992


### அமரர் சிவகுருநாதன் பாலசிங்கம்

பாலா என்னும் பண்புடையாளர்
மீளா உலகம் பறந்தனன் - என்றும்
தீரா நோயால் வாடிய போதும்
நேராய் வழியினில் நித்தமும் வாழ்ந்தவர்
வேறாய் மனத்தினில் வாழ்கிறார் இன்றும்.

மனைவி, மக்கள், குடும்பத்தினர்.

கட்டுடை,
மானிப்பாய்.
(23970)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### சின்னையா கனகரத்தினம்

(மகாலிங்கம்)

(ஹப்பி ரெக்ஸ்ற் பங்காளர்)

மண்ணுலகில்: 05—07—1952

விண்ணுலகில் 11—01—1990

திதி: 09 — 01 — 1993

ஆண்டு மூன்றில் அம்பலவன் அடியிணையை
வேண்டும் உன்னை வழுத்தி நினைப்போமே!

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;
மனைவி, பிள்ளைகள்.

நாவலர் ரோட்,
ஆயிரமனை(?).
(23909)

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 19 — 08 — 1939

மறைவு: 09 — 01 — 1980

### அமரர் நடராசா பாலசுப்பிரமணியம்

(முன்னைநாள் இலங்கைத் தமிழராசிரியர் சங்கப் பொதுச் செயலாளரும், சட்டத்தரணியும்)

அன்னாரது பதின்மூன்றாம் நினைவு தினமான இன்று அஞ்சலி செலுத்தி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

-அன்புப் பிள்ளைகள்

'பாலமனை',
வேலணை மேற்கு, வேலணை 6.
(23932)

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### இராசரத்தினம் செம்மணச்செல்வி

திருமதி இராஜரத்தினம் செம்மணச்செல்வி சிவபதமடைந்துவிட்டார்.

இவர் இராமச்சந்திரன் [முன்னாள் உத்தியோகத்தர் மாநகரசபை, அபிவிருத்திசபை யாழ்ப்பாணம்], கனகலட்சுமி பரந்தன் கூட்டுத்தாபனம் முன்னாள் உத்தியோகத்தர்], இராஜலட்சுமி [உபதபால் அதிபர், இராமநாதபுரம்] ஆகியோரின் அன்புத் தாயாரும், பரிபூரணம், கிருஸ்ணமூர்த்தி, விக்னராஜா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 8/1, வைமன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 11.00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

145, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாப்பாணம்
(23990)

தகவல்:
இராமச்சந்திரன்
(மகன்)

### அப்பா சின்னத்துரை

[நாதஸ்வர வித்துவான்]

கைதடியைச் சேர்ந்த அப்பா சின்னத்துரை நேற்று 08 - 01 - 93இல் காலமானார். அன்னார் செல்லக்கண்ணுவின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, தங்கவேலு, திரவியராசா [சண்முகம்], செல்வராசா [சுவிஸ்], சீதாலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் கு. பழனிமலை, செ துரைசிங்கம், ஆ. நாகராசா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [9 - 1 - 93] சனிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் சி. தங்கவேலு.

கைதடி கிழக்கு,
கைதடி.
[23985]

### திருமதி தம்பிராசா சின்னம்மா

சண்டிலிப்பாய் மேற்கைச் சேர்ந்த திருமதி தம்பிராசா சின்னம்மா 07 01-199 . வியாழன் காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், கந்தசாமி (ஆசிரியர். வட்டு. சுப்பிரமணிய வித்தியாசாலை), துரைராசா (தபாற் கந்தோர், சண்டிலிப்பாய்), புவனேஸ்வரி, சர்வேஸ்வரி, விஸ்வரத்தினம் (கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரி, தேவசேனாபதி (ஓய்வு பெற்ற அரசாங்க இலிகிதர், ஆசிரியர் ஏழாலை ம.வி.), இ. சரோஜா, இளையதம்பி (கட்டடத் திணைக்களம், வவுனியா), சகுந்தலா ஆகியோரின் மாமியாரும், சுஜாதா, சுதாகரன், சுதர்சன், சுகந்தன், சுசாந்தன், சதீசன், நதியா, சுகிர்தா ஆகியோரினது அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 07-01-1993 அன்று சண்டிலிப்பாயில் நடைபெற்றன; இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கந்தசாமி (மகன்)

[5718]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### புதுவழி திரும்பும் நிகழ்வு

பலாலி ஆசிரிய கலாசாலையில் பயின்று தமது பயிற்சி நெறியை முடித்துக் கொண்டு வெளியேறிய இருநூறுக்கும் அதிகமான ஆசிரியர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட நிகழ்ச்சி கடந்த வாரம் நடைபெற்றுள்ளது.

இந்த விழாவில் மூன்று புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டதை அவதானிக்க முடிகிறது. ஆசிரியர்கள் தமது தொழிலின் மகத்துவத்தைப் பேணி உழைப்பதாக உறுதிமொழி எடுத்தது முதன்மையானது. அவர்களுக்குரிய சான்றிதழ்களை விரிவுரையாளர்களே வழங்கியது இரண்டாவது. வெளியில் இருந்து அதிகாரி ஒருவர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதற்குப் பதிலாக பயிற்சி முடிந்து வெளியேறும் ஆசிரிய மாணவர் ஒருவரே கலந்து கொண்டமை மூன்றாவது.

இவற்றுள் ஆசிரிய மாணவர்கள் தாம் பயிற்சி பெற்று வெளியேறியபோது சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டமை சிறப்பாகக் குறிப்பிடக் கூடிய ஒன்றாகும்.

ஆசிரியர் தொழில் மகத்துவமிக்க, பெருமைக்குரிய தொழில். ஒருவன் எவ்வளவு விலை கொடுத்தும் பெற வேண்டிய சொத்துக் கல்வி. அது ஒன்று தான் அறிவுடை சமூகத்தை உருவாக்கும். அறிவுடை சமூகம் தான் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காண வல்லது.

அறிவுடை சமூகத்துக்கு அத்திவாரமாக அமைவது கல்வி. அந்தக் கல்வியை எதிர்கால சமுதாயத்திற்கு ஊட்டுபவர்கள் ஆசிரியர்கள் — குரு. அதனாலேயே தமிழர் பாரம்பரியத்தில் குருவும் தெய்வமாக மதிக்கப்பட்டார்.

ஆனால் காலத்தின் கோலத்தினால் அந்தப் பண்பாடு பாரம்பரியமும் தேய்ந்து, எல்லாம் தலைகீழாகி விட்டது. சமூகத்தில் குருபக்தி குறைந்து விட்டது. ஆசிரியர்களுக்கு இருந்த மதிப்பும், மரியாதையும் மங்கிப் போயின. இந்தக் கவலை தரும் நிலைக்கு இரு தரப்பினரும் காரணர்களே.

முந்திய நிலையை உருவாக்குவதற்கு தவறிழைத்த இருதரப்பினரும் திருந்திக் கொள்ள வேண்டும். அந்த வகையில் ஆசிரியர்களின் சத்தியப் பிரமாணம் வரவேற்கப்பட வேண்டியது.

கல்வியின் உயர்ந்த நோக்கங்களை உணர்ந்து, மாணவர் தம் முழு வளர்ச்சியை மனதில் கொண்டு மகிழ்வோடு பணி செய்வேன் —

பாடசாலை ஓர் சமூக அபிவிருத்தி நிலையம் என்பதைக் கருத்திற் கொண்டு, பாடச் செயற்பாடுகள், பாட இணைச் செயற்பாடுகள் அனைத்திலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு, மாணவரின் கல்வி விருத்திக்காக அயராது உழைப்பேன் —

எது நாட்டின் பண்பாட்டு விழுமியங்களைப் பேணி, சமகால நிகழ்வுகளுக்குப் பொருத்தப்பாடு பெற்று, சமூகம் வேண்டி நிற்கும் கல்வித் தேவைகளை உணர்ந்து சமூக மேம்பாட்டிற்காக திரிகரண சுத்தியுடன் பணிபுரிவேன் — என்பன ஆசிரிய மாணவர் செய்து கொண்ட உறுதிமொழியின் சில பகுதிகளாகும்.

இந்தப் புதுவழி திரும்புதலுக்கு ஆலோசனை வழங்கியவர் யாழ். கல்விப் பணிப்பாளர் என அறியப்படுகிறது. இந்த நல்ல முயற்சி ஆசிரியர் தரப்பில் விடப்பட்ட தவறைத் திருத்தப் பெரிதும் உதவும்.

ஆசிரியர்கள் தாம் செய்த ஆணைக்குச் செயல் வடிவம் கொடுக்குங்கால் சமூகமும், மாணவர்களும் தம்மைத் திருத்துவதற்கு வழிபிறக்கும் — ஆசிரியர்களுக்குரிய கௌரவம் வழங்கப்படும — என்று நம்பலாம்.

### கொப்பிகளுக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜன 9

குடாநாட்டில் மாணவர்களுக்கான பயிற்சிக் கொப்பிகளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் மாணவர்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். பெற்றோர்கள் கடை கடையாக அலைந்து திரிகின்றனர். (ஓ-111)

### 20 பேருக்கு வீடு கட்ட நிதி

நாவலி, ஜன. 9

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த வீடற்ற 20 பேருக்கு, வீடு கட்டுவதற்கென தேசிய விடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ரூபா ஐயாயிரம் வீதம் வழங்கியுள்ளது.

நவாலி, ஆனைக்கோட்டை, உயரப்புலம், மானிப்பாய், சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி, பிரான்பற்று, சுதுமலை ஆகிய பகுதிகளில் இருந்தே இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். (த-100)

# ராணுவத்துக்கு ஆட்சேர்க்க விளம்பரத்தை நாடும் நிலை

## 'சண்டேரைம்ஸ்'' ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 9

இராணுவத்துக்கு ஆட்சேர்க்க விளம்பர ஏஜென்சி ஒன்றின் உதவியும் நாடப்பட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இம்மாதம் மூன்றாம் திகதிய ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கத்தில் இதுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது

பிரஸ்தாப தலையங்கத்தின் சில பகுதிகள் வருமாறு:-

படையினருக்கு அதிக எண்ணிக்கையில் உயிரிழப்புகளையும, படையினர் பலர் தப்பி ஓடியதையும் ஒருபுறம் கண்ட 1992 ஆம் ஆண்டு இன்னொரு புறம் இராணுவ ரீதியில் மேலும் போக முடியாத பாதைகளையும் கயிறு திரிப்புகளையுமே உருவாக்கியது.

வெலி ஓயாவில் நத்தார் காலத்தில் படையினர் பலர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஹக்மனையில் உள்ள சிறிய கிராமம் ஒன்றில் இடம்பெற்ற அந்தக் காட்சி நாட்டின் சோதனைக் காலத்துக்குச் சாட்சியாக அமைந்திருந்தது.

அந்தச் சின்னக் கிராமத்தில் வெலி ஓயாப் பகுதித் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 படையினரின் இறுதிக்கிரியைகள் இடம்பெற்றன.

இராணுவத்தில் சேர்வதற்கு ஆர்வத்துடன் இளைஞர்கள் மைல் நீள வரிசையில் நின்றதை ஒருநாள் அன்று கண்டோம் ஆனால் இராணுவத்துக்கு ஆட்திரட்டுவதற்காக அண்மையில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளித்த இளைஞர்களின் எண்ணிக்கை மிகவும குறைவாக இருந்தது. இராணுவத்துக்கு இளைஞர்களைச் சேர்க்க அதிகாரிகள் விளம்பர ஏஜென்ஸி ஒன்றின் துணையையும் நாட வேண்டியதாயிற்று

கடந்த ஆண்டின் முடிவில் கொழும்பில் இருந்து வெளியான அரசியல் முரண்பாடுகளைக் கொண்ட சைகைகள், விடுதலைப் புலிகளின் ஆக்ரோஷத் தாக்குதல்களுக்கும் — போர் உபாயங்கள் குறித்து ஆயுதப்படைகளின் கட்டளைப் பீடங்களுக்கும் அதிகார வர்க்கத்துக்கும் இடையே நிலவும் ஆழமான நிச்சயமற்ற தன்மைக்கும் இடையே துருப்புகள் சிக்கியுள்ளன.

முரண்பாடுகளும், குழப்பங்களும் 1992இல் அரசியல் வெற்றிடத்தை ஏற்படுத்தி, இராணுவத்தை வாயடைக்கச் செய்திருக்குமானால், இந்தக் குழப்பத்தில் இருந்து நாட்டை மீட்டெடுக்க தெளிவான சிந்தனையும் தெளிவாக வரையறுக்கப்பட்ட உத்திகளும் அவசரமாகத் தேவைப்படுகின்றன.

ஆயுதங்களைக் களைந்து அல்லது இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் வரை சமாதான உடன்பாடு ஏதும் சாத்தியமா? பேச்சுகளை நடத்துவதற்காக அமைச்சர்கள் வெளிநாடு சென்றிருப்பதாகவும் அதேவேளை விடுதலைப் புலிகளின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்துபவர்கள் கொழும்பில் இருப்பதாகவும் தொடராகச் செய்திகள் வெளியாகி வருகின்றன ஆனால் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் எங்கே உள்ளார்?

நிபந்தனைகளை விதிப்பதைத் தவிர மற்றப்படி அவர் ஏன் மௌனமாக இருக்கிறார்? 1987இன் பின்னர் பேச்சுவார்த்தை நடத்தும் எவரையும் சந்திக்க வேண்டும் என்ற யோசனையை அவர் ஏன் உதாசீனம் செய்து வருகின்றார்?

—இப்படி ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 9

ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெற்றுவரும் கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெற இருக்கும் ஆட்டங்கள் வருமாறு:-

★ மாலை 3.30 மணி:- சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி எதிர் ஜொனியன்ஸ் கறுப்பு அணி.

★ மாலை 4 30 மணி: ஜொனியன்ஸ் சிவப்பு அணி எதிர் யாழ். மத்திய கல்லூரி அணி. (உ)

### 94 ஜனவரியில் வட - கிழக்கில் தேர்தலாம்!

கொழும்பு, ஜன. 9

அரசமைப்பு நடைமுறைகளுக்கு இணங்க வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் 1994 ஜனவரியில் தான் நடத்தப்பட வேண்டும்.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டிசில்வா இவ்வாறு கூறினார். (ஓ-எ)

### வலைப்பந்து நடுவர் பரீட்சை

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் நடத்தப்படும் வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான செய்முறைப் பரீட்சை சனி, ஞாயிறு தினங்களில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நடுவர் பயிற்சிக்கான எழுத்துப் பரீட்சைக்குத்தோற்றிச் சித்தியடைந்தவர்களை நாளை சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் சமுகமளிக்குமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது. (க)

### உருளைக்கிழங்கு செய்கை

தெல்லிப்பழை, ஜன. 9

உடுவில் பகுதியில் உருளைக்கிழங்குச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

பெரும் செலவு செய்து தாம் இம்முறை உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ஓ-68)

### குடாநாட்டில் குடிசன மதிப்பு

தெல்லிப்பழை, ஜன. 9

குடாநாட்டில் குடிசன மதிப்பீடு வேலைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் செய்து வருகிறது.

வீடு வீடாகச் செல்லும் தொண்டர்கள் விசேட பத்திரங்கள் மூலம் மதிப்பீடு வேலைகளைச் மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-68)

### ஏவுகணை விவகாரம்:

## அமெரிக்கா எச்சரிக்கை; ஈராக் நிராகரித்தது!

பக்தாத், ஜன. 9

விமான எதிர்ப்பு ஏவுகணைகளை அகற்றுவதற்கு அமெரிக்கா தலைமையிலான நேச அணி எச்சரித்து விதித்த 48 மணித்தியாலக் காலக்கெடுவை ஈராக் நிராகரித்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஈராக்கின் சில பகுதிகள் மீதான ஈராக்கின் போர் விமானங்கள் பறப்பதற்கு ஐ நா. பாதுகாப்புச் சபை தடை விதித்துள்ளது தெரிந்ததே.

அப்பகுதிக்குள் இப்போது விமான எதிர்ப்பு ஏவுகணைகளை ஈராக் இராணுவம் நிறுத்தி வைத்திருக்கின்றது.

தமது நாட்டுக்குள் எங்கும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை நிறுத்தி வைப்பதற்குத் தமக்கு உரிமை உண்டு என்று ஈராக் மேலும் தெரிவித்துள்ளது. (ஓ-எ)

### போட்டிப் பரீட்சையில் தெரிவான

## மேலும் பல எழுதுநர்கள் நியமனம் பெற வாய்ப்பு

எழுதுநருக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் மேலும் பலர் அரச அலுவலகங்களில் நியமனம் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அரச அலுவலகங்களில் உள்ள வெற்றிடங்களில் 75 வீதமான வெற்றிடங்களுக்கே முன்னர் எழுதுநர்கள் நியமிக்கப்பட்டனர்.

தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் அங்கு நடத்திய பேச்சுக்களை அடுத்து 90 வீதமான வெற்றிடங்களுக்கு புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட எழுதுநர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது

யாழ். அரச அதிபர் கொழும்பில் இருந்து இத்தகவலை செயலகத்துக்கு அறிவித்தார் (த-5)

## முஸ்லிம் காங்கிரஸின் தேசிய மாநாடு பெப். 7 இல்

கொழும்பு, ஜன. 9

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 11ஆவது தேசிய மாநாடு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி கொழும்பு சுகததாஸா விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கின்றது.

ஜனாதிபதி பிரேமதாஸா பிரதம அதிதியாகவும் சுதந்திரக்கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கௌரவ அதிதியாகவும் அழைக்கப்பட்டுள்ளனர்.

மாநாட்டில் திருமதி பண்டாரநாயக்கா கலந்து கொள்ளாத பட்சத்தில், கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்காவை அழைக்க திட்டமிட்டுள்ளோம் என்று முஸ்லிம் காங்கிரஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (த- எ)

## இறைவனை நன்கு அறிதலே கல்வியின் உச்சநிலை ஆகும்

### திருவாசக விழாவில் பேராசிரியர் உரை

யாழ்ப்பாணம், ஜன. 9

'கல்வியின் உச்சநிலை இறைவனை நன்கு அறிதலே ஆகும். நாயிற் கடையன் என்று தன்னையும் தாயிற் சிறந்த தயவான தத்துவன் என்று இறைவனையும் துதிக்கும் மணிவாசகரிடம் ஒரு அறிஞருக்கு இருக்க வேண்டிய பண்பும் பணிவும் காணப்படுகின்றன."

யாழ். வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற திருவாசகப் பெருவிழாவின் இரண்டாம் நாளான 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உரை நிகழ்த்திய பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

விழாவிற்கு தலைமை வகித்த யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. ந. வைத்திலிங்கம் பேசுகையில்;

''பாவையரின் சிறப்பான வாழ்வு குறித்து எழுந்த நூல் திருவாசகம்'' என்று கூறினார்

திருமதி நாச்சியார் செல்வநாயகம், திருவாளர்கள் க. சொக்கலிங்கம், சிவ. மகாலிங்கம் ... ஆகியோரும் உரையாற்றினார்கள். (க-111)

# இடம்பெயர்ந்த ஆசிரியருக்கு 2 மாதமாக சம்பளம் இல்லை!

கொழும்பு, ஜன. 9

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து இடம்பெயர்ந்து நாட்டின் ஏனைய பகுதிகளில் தங்கியுள்ள சுமார் 2 ஆயிரம் ஆசிரியர்களுக்கு கடந்த 2 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பளத்தை வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியை அளிப்பது தொடர்பாக மாகாணசபை நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்குவதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த ஆசிரியர்களை அவர்களது விருப்பத்தின் பேரில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பாடசாலைகளில் நியமிக்க கல்வி அமைச்சு ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தது.

ஆனால் இவ் ஆசிரியர்களின் சம்பளத்தை வழங்கத் தேவையான நிதியைப் பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்ட மாகாணசபைகள், வட-கிழக்கு மாகாண சபையின் கல்விப் பணிமனையிடம் கோரிய போது அது நிராகரிக்கப்பட்டதுடன்— அந்த ஆசிரியர்களை தங்கள் பிரதேசத்தில் கடமையாற்ற அனுப்பிவைக்கும்படி தெரிவிக்கப்பட்டதாகவும் தேசிய கல்விச் சேவையாளர் சங்கத்தின் பிரதான செயலாளர் திரு. பிரேமசார சமரதுங்க தெரிவித்தார்

இவ் ஆசிரியர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி இச்சங்கம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது. (த-6)

## தமிழகத்தில் மீண்டும் புலிகள் அ.தி.மு.க. அமைச்சர் மறுப்பு

கொழும்பு, ஜன. 9

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் தலையெடுத்துள்ளது என்று தமிழ்நாடு மாநில இந்திரா காங்கிரஸ் தெரிவித்த குற்றச்சாட்டை மாநில அ.தி.மு.க. வின் நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் மறுத்திருக்கிறார்.

மாநிலத்தில் விடுதலைப் புலிகளின நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு மாநில அரசு எடுத்துள்ள செயல்பாடுகள் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவானும் இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப்பும் திருப்தி தெரிவித்திருக்கையில் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் இக்குற்றச்சாட்டை சுமத்தியிருப்பது வியப்புத் தருவதாக திரு. நெடுஞ்செழியன் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அ. தி. மு.க அரசு பதவிக்கு வந்தவுடன் முதல் பணியாக விடுதலைப்புலிகளை அடக்கும் நடவடிக்கைகளையே எடுத்து இருந்தது என்றும் அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (த-எ)

### ● ரயில் பெட்டி வீடுகள்!

கொழும்பு, ஜன 9

குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்காக கழித்து விடப்பட்ட ரயில் பெட்டிகள் பயன்படுத்தப்படவுள்ளன

இத்தகவலை போக்குவரத்து அமைச்சர் விஜேபால மெண்டிஸ் தெரிவித்தார்.

ரயில் பெட்டிகளைப் பயன்படுத்தி 28 வீடுகள் தண்டகமுவயில் கட்டப்படவுள்ளன. 500 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட வீடு ஒன்றை ரயில் பெட்டியைப் பயன்படுத்திக் கட்ட சுமார் 35 ஆயிரம் ரூபா செலவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

### சிறுபோகச்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி

பயறு, எள்ளு, குரக்கன் போன்ற சிறுதானியங்கள் குடாநாட்டில் பயிரிடப்படும் என்றும்.

இதற்கு வேண்டிய விதை தானியங்களை குடாநாட்டுக்கு வெளியில் இருந்து தருவித்து விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 பொதுமக்கள் பலியான

# சித்தன்கேணிச் சம்பவம்: பிரதமரிடம் முறையீடு

கொழும்பு, ஜன. 9

கடந்த புதன்கிழமை வட்டுக்கோட்டை - சித்தன்கேணிப் பகுதியில் இடம் பெற்ற விமானக்குண்டு வீச்சுச் சம்பவம் குறித்து மட்டக்களப்பு மாவட்ட எம். பி. ஜோசப் பரராஜசிங்கம் பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜெதுங்காவிடம் முறையிட்டார்.

உடனடியாக விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலை நிறுத்தும்படியும் சித்தன்கேணிச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும்படியும் அவர் பிரதமரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

சித்தன்கேணிச் சம்பவத்தில் ஒன்பது பொதுமக்கள் பலியானார்கள் என்று இராணுவ அதிகாரிகளிடம் பிரஸ்தாபிக்கப்பட்ட போது —

''அப்பகுதியில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது சில குண்டுகள் வீசப்பட்டன. ஆனால் பொது மக்கள் கொல்லப்பட்டதாகத் தகவல் ஏதும் இல்லை'' என்று இராணுவ அதிகாரிகள் தரப்பில் பதிலளிக்கப்பட்டதாக இந்திய வானொலி தெரிவித்தது

[ஓ-எ]

## உணவு முத்திரை பொருள்கள்

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் டிசம்பர் மாதத்திற்குரிய உணவு முத்திரைப் பொருள்கள் இப்போது வழங்கப்படுகின்றன. [க-154]

### மாவுடன் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

3 ஆயிரம் மெற்றிக் தொன் மாவை கப்பலில் எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் 'பிரிமா' ஆலையில் வேறு கப்பலுக்கு மா ஏற்றுவதால், அவசரமாக ஏற்றப்பட்ட ஆயிரத்து 200 மெற்றிக் தொன் மாவுடன் இன்று 'குமண' பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

கொழும்பில் பொருள்களை ஏற்றிக் கொண்டிருக்கும் 'குமாரி' கப்பல் எதிர்வரும் 16 ஆம் திகதி பருத்தித்துறையை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களுடன் தபால் பொதிகளும் 'குமாரி' யில் எடுத்து வரப்படலாம் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மகாராஷ்டிர ஆளுநராக அலெக்ஸாண்டர்

பம்பாய் ஜன 9

மகாராஷ்டிர மாநில ஆளுநராக டாக்டர் பி. சி. அலெக்ஸாண்டர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தமிழகத்தின் ஆளுநராக இருந்தார்.

மகாராஷ்டிர மாநில ஆளுநராக இருந்த திரு ஸி. சுப்பிரமணியம் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்தே, அந்த இடத்துக்கு டாக்டர் அலெக்ஸாண்டர் நியமிக்கப்பட்டிருக்கிறார். (ஓ-எ)

முதலாவது

# பிறந்தின வாழ்த்து



## உதயகுமார் கோபிராஜ்

09 — 01 — 1993

கந்தரோடையைச் சேர்ந்த உதயகுமார் – றமணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கோபிராஜ் தனது முதலாவது பிறந்த தினத்தை அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்

இவரை சுவிஸில் அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா (திருமலை), பெரியம்மா, சுவிஸில் இருக்கும் பெரியமாமா குடும்பத்தினர், நோர்வேயில் இருக்கும் சின்னமாமா, ஆசைமாமா (சுவிஸ்), ராமு மாமா, குட்டிமாமா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், திருமலையில் இருக்கும் பெரியப்பா குடும்பத்தினர், அக்காமார், அண்ணாமார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

கந்தரோடை மேற்கு,
(ஞான வைரவர் கோவிலடி),
சுன்னாகம்.

(23980)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அங்கிலிக்கன் சபையினால் புதிய போசாக்கு நிலையம்

யாழ். மாவட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோருக்கு போசாக்கை வழங்கத்தக்க வகையில் போசாக்கு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் கொக்குவிலில் நடத்தப்படும் போசாக்கு நிலையத்தை நேற்று பார்வையிட்ட அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி வண. கெனத் பெர்னாண்டோ புதிய நிலையம் ஒன்றை அமைக்க உதவி வழங்கவிருக்கிறார்

யுத்தத்தினால் யாழ். மாவட்ட மக்களின் போசாக்கு நிலை மிகவும் பாதிப்படைந்திருப்பது குறித்து அவர் கேட்டறிந்தார்

போசாக்கு நிலையத்தை அமைக்கவும், மாதா மாதம் அந்த நிலையத்தைப் பராமரிக்கவும் நிதி வழங்க ஏற்பாடு செய்து தருவதாக ஆயர் உறுதி வழங்கினார்.

(உ-)

### கண்காட்சியில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடைகளில், 142 கடைகள் முற்றாக எரிந்து நாசமாகின.

சுமார் 3 கோடி ரூபா பெறுமதியான புத்தகங்கள் எரிந்து போய்விட்டன என்றும் —

தீயினால் ஏராளமான அபூர்வ புத்தகங்கள் அழிந்து விட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் குறித்து அறிவிக்கப்படவில்லை. (உ-எக)

### நகரில் திங்கள்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அணி திரளத் தொடங்கியுள்ளதாக தமிழீழ வெகுசன அமைப்புகளின் ஒன்றியம் நேற்று அறிவித்தது. அதற்கான ஏற்பாடுகள் சகல மட்டத்திலும் சுறுசுறுப்பாக நடைபெற்று வருவதாகவும் ஒன்றியம் தெரிவிக்கிறது

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் யாழ் மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம், யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை. வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாசம், வலிகாமம் வர்த்தக சங்கங்கள், வலிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், வலிகாமம் பிரிவு வெகுசன இயக்கம், தீவக மக்கள் நலன்காக்கும் அமைப்பு, சிமெந்து கட்டட தொழிலாளர் சங்கம், கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம், தமிழீழ வெகுசன அமைப்புக் குழு போன்ற பல்வேறு அமைப்புகளும் தத்தமது அங்கத்தவர்களையும், பொதுமக்களையும் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளன.

(ஓ-க-152-17)

### போக்குவரத்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பால் போகவேண்டாம் என்று அரசு கூறவில்லை. நானும் அதைப்பற்றிக் கேட்கவில்லை கிளாலியூடாக செல்ல வேண்டாம் என்று எச்சரித்தது பற்றியும் எனக்குத் தெரியாது.

கிளிநொச்சியில் நின்ற சமயம் இரு விடயங்கள் குறித்து முடிவு எடுக்க வேண்டிய நிலையில் இருந்தேன். வவுனியா சென்று ஹெலி மூலம் யாழ்ப்பாணம் செல்வதா? இல்லையேல் மக்கள் கஷ்டப்பட்டு செல்லும் கிளாலிப் பாதையூடாக செல்வதா?— என்ற கேள்விகள் எனது மனதில் எழுந்தன.

எனது திருநிலைப்படுத்தும் வைபவத்துக்கு இப்படியான உயிராபத்துள்ள— இன்னல்கள் நிறைந்த — பாதையால் தான் மக்கள் வந்தார்கள் குடாநாட்டு மக்களும் இப்படியான இன்னல் நிறைந்த பாதையையே பாவிக்கின்றனர். இதனால் நானும் இந்தப் பாதையால் வரத் தீர்மானித்து இங்கு வந்துள்ளேன்.

#### தெற்கின் நிலைப்பாடு

யுத்தத்துக்கு ஒரு முடிவு வர வேண்டும் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பே தென் இலங்கையிலும் நிலவுகிறது. இங்கும் அதே நிலையைத்தான் காண முடிகிறது சகலரும் ஒன்றுபட்டு தீர்வு காண முயல வேண்டும்

இங்கு நேரில் வந்ததால் மக்களின் அவலங்களைக் காணக் கூடியதாக இருக்கிறது மக்களின் அவலங்களை கொழும்பில் தெரிவித்து தீர்வு காண முயற்சிப்பேன்— என்றார் (அ-3)

### தமிழர் தம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வாழ்கிறார்கள். வெளித் தொடர்புகள் இல்லாத நிலையில் இருக்கிறார்கள்.

குடாநாட்டிலிருந்து வெளியிடப் போக்குவரத்துக்கு சட்டபூர்வமான பாதை ஒன்றைத் திறக்குமாறு அரசிடம் கூறுங்கள்.

தீர்க்க தரிசனம் நிறைந்த துணிச்சலான முடிவால் நீங்கள் இங்கு விஜயம் செய்திருப்பது மக்களுக்கு நம்பிக்கையை தந்துள்ளது. — என்றார்.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடந்த வரவேற்புக் கூட்டத்தில் தென்னிந்திய திருச்சபை ஆயர் அதி வண. டி.ஜே.அம்பலவாணர், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோரும் வரவேற்புரை நிகழ்த்தினர்.

அங்கிலிக்கன் திருச்சபையை சேர்ந்த பிதா நேசகுமார் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

அதன் பின்னர் அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் பதிலுரையாற்றினார். (அ-ஓ-5)

### ஆயருக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி,

வரவேற்பு நிகழ்ச்சி இடம்பெற்றது.

ஆயரும், அவருடன் வந்துள்ள கிழக்காசிய தேசியக் கிறிஸ்தவ மன்றத்தின் செயலாளர் அருட்கலாநிதி ரியன்ஸி பெரேராவும் நாதஸ்வர மேள வாத்தியங்கள் இசைக்க சென் ஜோன்ஸ் தேவாலயத்தில் இருந்து சென். ஜோன்ஸ் கல்லூரி ஜூபிலி மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. ஓ-5)

### ராணுவ நடவடிக்கை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று அவர்கள் விசனம் தெரிவித்திருக்கின்றனர்

ஜனாதிபதி பிரேமதாஸாவால் யுத்தத்தை நிறுத்துவதற்கான தீர்வுத்திட்டம் ஒன்றை உடனடியாகத் தர முடியும் என்று சிங்கள மக்கள் நம்பவில்லை [illegible] அவர் [illegible] ளார். [உ]

### ஸ்ரீலங்கா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் மகஜரின் பிரதியே ஐ நாவுக்கும் அனுப்பப்படவுள்ளது.

அந்த மகஜரில் ஐந்து அம்சக் கோரிக்கைகள் குறித்து விளக்கப்பட்டிருக்கும் எனத் தெரிய வருகிறது.

நத்தார் தினத்தன்றும் பின்னர் கிளாலியிலும், சித்தன் கேணியிலும் பலர் ஸ்ரீலங்காப் படையினரால் கோரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் குறித்தும் ஐ. நாவுக்கு மகஜர் அனுப்பப்படவுள்ளது. [ஓ-3]

சிங்கள ஸ்ரீலங்காக் கூலிப்படையுடன் சில்லாலையில மோதி வீரச்சாவடைந்த வெற்றித் திருமகன்

லெப்டினன்ற்

## ★ செங்கண்ணன் (பூவாசம்) ★

புஷ்பம் இளங்கிரன், புங்குடுதீவு-4

அவர்களது

# 45 ஆவது நினைவு நாள் வீர அஞ்சலி!

9-1-93

தங்கத் தமிழ்ஈழம் தழைக்க மு ளை யா க

04-11-72



எங்கள்குல விரோ தியை ஒழிக்கும் பணியில் வி தை யா க

26-11-92

''வெங்களத்திற் போராடி வீரவிதை யாகிவிட்ட செங்கண்ணா! எங்கள் திரவியமே! — இங்குனது எண்ணம் நிறைவேறும்; ஈழம் மலருமடா! திண்ணமிது! சொல்வோம்! துணிந்து!''

''பொன்கொடு தீவெம்பதியில் உந்தன் தந்தை
பேயரிடம் அகப்பட்டார்; செய்தி இல்லை
கண்மணியே! உன்சடலம் காணவில்லை
காரிருளாந் துயருக்கோர் விடிவும் இல்லை
மண்ணதனை மீட்குமுயர்ப் பணியில் இன்று
மாவீர னாகிவிட்ட தெய்வம் நீயே!
விண்ணதனிற் குலுங்குமுயர்ப் பூவாய் வாசம்
வீசிடுக! நாமமது நிலைத்து வாழ்க!''

பெருமையுடன்
கண்ணீரைச் சொரிந்து நிற்கும்
உனது பாசமிகு குடும்பத்தினர்

159/3, நல்லலக்ஷ்மி அவெனியு,
நல்லூர்.

(23992)

# கண்ணீர் அஞ்சலி

## T. யோகராஜா

யோகங்கள் வடிவாமன
யோகி நீர் என்றிருந்தோம்
சோகங்கள் வடிவாய் நாங்கள்
துடித்திடச் சென்றீர் ஐயா.
யுகம் பல கடந்த போதும்
உம் நினை வகலாதிங்கு
முகம்பல கண்ட போதும்
முழுதுமாய்த் தெரிவீர்நீரே

ஆண்டு 11C மாணவர்களும்,
ஆசிரியர்களும்
யாழ். இந்துக் கல்லூரி.

[23989]

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லப்பா வள்ளியம்மை

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தேவிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பா வள்ளியம்மை 31-12-92 அன்று தேவிபுரத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, கமலாம்பிகை, கந்தசாமி, (சாந்தி களஞ்சியம், யாழ்ப்பாணம்), பராசக்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராஜ கோபாலபிள்ளை, அ. ப. கனகரெட்ணம், இந்திராணி, பொன்னுத்துரை ஆகியோரின் அன்பு மாமியாரும், கந்தையா, பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரியும ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 1-1-93 அன்று தேவி புரத்தில் நடைபெற்றன. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. கந்தசாமி
(மகன்)

42/1 அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம்.

(23993)

மேலும் மரண அறிவித்தல்கள் 4ஆம்பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org